பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
16 06 2026 TUESDAY 12 40 PM
ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு. நரேந்திர மோடி, பிரான்ஸ் நாட்டின் Evian நகரில் நடைபெறும் G-7 உச்சிமாநாட்டில் இன்று உரையாற்றுகிறார்.
- ஜனநாயகத்தில் மக்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கூறியுள்ளார்.
- நாட்டின் கட்டமைப்பு வசதிகள், முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு மேம்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.
- கென்யாவில் மனித உரிமை மீறல் காரணமாக பாதிக்கப்பட்ட 2 ஆயிரம் பேருக்கு நிவாரணம் வழங்கப்படும் என்று அந்நாட்டு அதிபர் William Ruto அறிவித்துள்ளார்.
- Nations கோப்பை ஹாக்கி போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>><<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, பிரான்ஸ் நாட்டின் Evian நகரில் நடைபெறும் G-7 உச்சிமாநாட்டில் இன்று உரையாற்றுகிறார்.

G-7 உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக, உலக நாடுகளுக்கு இடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவது குறித்த கருத்தரங்கில் அவர் பேசவுள்ளார்.

G-7 உறுப்பு நாடுகளின் தலைவர்கள், உலக வங்கி மற்றும் ஆப்பிரிக்க வளர்ச்சி வங்கி அலுவலர்கள் உள்ளிட்டோர் இதில் கலந்து கொள்கின்றனர்.

இக்கூட்டத்தினிடையே, திரு. நரேந்திர மோடி, கனடா பிரதமர் Mark Carney, பிரிட்டன் பிரதமர் Kier Starmer, ஐக்கிய அரபு எமிரேட் அதிபர் Sheikh Mohammed உள்ளிட்ட தலைவர்களுடன் ஆலோசனை நடத்தவுள்ளார்.

பின்னர், பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரோனுடன் இருநாட்டு உறவுகள் குறித்து அவர் ஆலோசனை நடத்தவுள்ளார்.

>>>>>><<<<<<

*ஜனநாயகத்தில் மக்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கூறியுள்ளார்.*

*புதுதில்லியில் வளர்ச்சியடைந்த இந்தியா - இளையோர் நாடாளுமன்ற நிகழ்ச்சியில் கலந்துரையாடிய அவர், உலகிலேயே மிக அதிக மக்கள்தொகை கொண்ட நாடான இந்தியா, மிகப் பெரிய ஜனநாயக நாடாக உருவெடுத்துள்ளதாக தெரிவித்தார்.*

*சுதந்திரத்திற்குப் பிறகு மக்களின் பங்களிப்புடன், ஜனநாயகம் மேலும் வலுவடைந்துள்ளதாக அவர் கூறினார்.*

*வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கும், நாட்டின் எதிர்காலத்தை வலுப்படுத்துவதற்கும் ஜனநாயகத்தில் மக்களின் பங்களிப்பு இன்றியமையாதது என்று திரு. ஓம் பிர்லா தெரிவித்தார்.*

*>>>>>><<<<<<*

*நாட்டின் கட்டமைப்பு வசதிகள், கடந்த 12 ஆண்டுகளில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு மேம்பட்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.*

*சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசின் திட்டங்கள் மூலம், நெடுஞ்சாலை, சரக்கு வழித்தடங்கள், ரயில்வே உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.*

*Chenab பாலம் கட்டப்பட்டதன் மூலம், நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கட்டமைப்பு வசதிகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.*

*>>>>>><<<<<<*

*டீசல் மற்றும் விமான எரிபொருள் ஏற்றுமதிக்கான சிறப்பு கூடுதல் கலால் வரியை மத்திய அரசு உயர்த்தியுள்ளது.*

*டீசலுக்கான ஏற்றுமதி வரி, லிட்டருக்கு 14 ரூபாயாகவும், விமான எரிபொருளுக்கான வரி லிட்டருக்கு 12 ரூபாய் 5 காசாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இருப்பினும், உள்நாட்டு பயன்பாட்டிற்கான பெட்ரோல் - டீசல் விலையில் எந்த மாற்றமும் இல்லை.*

*மேற்காசிய பிரச்சினையை தொடர்ந்து, சர்வதேச அளவில் நிலவும் கச்சா எண்ணெயின் பற்றாக்குறை காரணமாக, கடந்த மார்ச் 27ஆம் தேதியிலிருந்து பெட்ரோலியப் பொருட்கள் ஏற்றுமதிக்கு மத்திய அரசு கூடுதல் வரியை விதித்துள்ளது.*

*>>>>>><<<<<<*

*அமெரிக்காவின் Chicago-நகரில் உள்ள இந்திய துணைத் தூதரக வளாகத்தில், சுவாமி விவேகானந்தரின் உருவச் சிலையை அமெரிக்காவுக்கான இந்திய தூதர் திரு. வினெய் மோகன் க்வாத்ரா திறந்து வைத்தார்.*

*இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், சுவாமி விவேகானந்தரின் சேவை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான போதனைகள் இன்றைய காலகட்டத்திற்கும் பொருந்துவதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.*

*1893-ஆம் ஆண்டில் சிகாகோவில் நடைபெற்ற உலக சமய மாநாட்டில், சுவாமி விவேகானந்தர் ஆற்றிய உரை வரலாற்றுச் சிறப்புமிக்கது என்றும் திரு. வினெய் மோகன் க்வாத்ரா கூறியுள்ளார்.*

*>>>>>><<<<<<*

*ஆந்திர தலைநகர் அமராவதியில், சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் கிளையை தொடங்க மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு அழைப்பு விடுத்துள்ளார்.*

*சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழக தலைவர் பேராசிரியர் Tan Eng-யுடன் ஆலோசனை மேற்கொண்ட அவர், ஆராய்ச்சி, உயர்கல்வி உள்ளிட்டவற்றில் ஒத்துழைப்பதற்கான வாய்ப்புகள் குறித்து விவாதித்தார்.*

*ஆந்திராவில் உயர்கல்வியை மேம்படுத்த சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகம் ஒத்துழைக்க வேண்டும் என்றும் திரு. சந்திரபாபு நாயுடு கேட்டுக் கொண்டார்.*

*>>>>>><<<<<<*

*குஜராத்தில் அம்மாநில காவல்துறையினர் மேற்கொண்ட நடவடிக்கையில், குழந்தை தொழிலாளர்கள் 84 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.*

*இதுதொடர்பாக 26 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.*

குழந்தை தொழிலாளர் தடுப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, சூரத் உள்ளிட்ட நகரங்களில் நடத்திய சோதனைகளின் போது, இந்த குழந்தைகள் மீட்கப்பட்டுள்ளதாக மாநில காவல்துறை தலைவர் திரு. G.S. Malik தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, ஜவுளி ஆலைகள், உணவகங்கள், அரிசி ஆலைகள் மற்றும் சிறு குறு தொழில் நிறுவனங்களில் சோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

நீட் மறுதேர்வு நிறைவடையும்வரை டெலிகிராம் செயலிக்கு தடைவிதித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் மறுதேர்வு, இம்மாதம் 21ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில், இந்த செயலியில் ஆன்லைன் வாயிலாக தகவல்களை அனுப்பவும், வரும் 22ஆம் தேதிவரை தடை விதிக்கப்பட்டுள்ளது.

மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் இந்த முடிவை வரவேற்றுள்ள தேசிய தேர்வு முகமை, இந்த டெலிகிராம் செயலியில் ஏற்கனவே பதிவேற்றம் செய்யப்பட்ட தகவல்களில் திருத்தங்களை செய்வதற்கான வசதியை தற்காலிமாக முடக்கி வைக்கப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளது.

முறைகேடுகளை தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நடவடிக்கை, மாணவர்களின் நலனை பாதுகாப்பதுடன் தேர்வுகளை நேர்மையாக நடத்துவதை உறுதி செய்யும் என்றும் தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது.

இதனிடையே, நீட் மறுதேர்வுக்கான நுழைவுச் சீட்டை, 10 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பதிவிறக்கம் செய்துள்ளதாகவும் அந்த முகமை கூறியுள்ளது.

>>>>>><<<<<<

ஐ.நா பாதுகாப்பு சபையில் நிரந்தரம் அல்லாத உறுப்பினர்களின் எண்ணிக்கையை மட்டும் அதிகரிக்கும் திட்டத்தை இந்தியா நிராகரித்துள்ளது.

நியூயார்க்கில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி திரு. ஹரீஷ், நிரந்தர உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்காமல், ஐ.நாவில் மேறகொள்ளப்படும சீரதிருத்தங்கள் பயனற்றது என்று தெரிவித்தார்.

வளரும் நாடுகளுக்கு உரிய பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில், நிரந்தர உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்பதே உறுப்பு நாடுகளின் கோரிக்கையாக இருந்து வருகிறது என்றும் திரு. ஹரீஷ் குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<

ஓமன் கடல் பகுதியில் தாக்குதலுக்கு உள்ளான கப்பலில் பணியாற்றிய 21 இந்திய மாலுமிகள் பத்திரமாக வீடு திரும்பியுள்ளதாக மஸ்கெட்டில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மீட்கப்பட்ட மாலுமிகளுடன் கலந்துரையாடிய இந்திய தூதர், நெருக்கடியான தருணத்தில் மனஉறுதியுடன் பணியாற்றிய மாலுமிகளுக்கு பாராட்டு தெரிவித்ததாக கூறப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் பணியாற்றும் இந்தியர்களின் நலனை பாதுகாக்க, மத்திய அரசு உறுதிபூண்டிருப்பதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

கென்யாவில் போராட்டத்தில் ஈடுபட்ட போது, மனித உரிமை மீறல் காரணமாக பாதிக்கப்பட்ட 2 ஆயிரம் பேருக்கு நிவாரணம் வழங்கப்படும் என்று அந்நாட்டு அதிபர் William Ruto தெரிவித்துள்ளார்.

வரி விதிப்பிற்கு எதிரான போராட்டத்தில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்ததை அடுத்து, இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

மனித உரிமை மீறலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அடுத்த வாரத்திலிருந்து நிவாரண நிதி வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக, ஒன்றரை கோடி அமெரிக்க டாலர் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

தமிழகம், கேரளா, மேற்குவங்கம், பீகார் மற்றும் புதுச்சேரியில் பல்வேறு இடங்களில் அடுத்த 24 மணி நேரத்திற்கு மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தில்லி, ஹரியானா, கர்நாடகா, ஜம்மு கஷ்மீர் உள்ளிட்ட பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெலங்கானா, விதர்பா, கோவா, மஹாராஷ்ட்ரா பகுதிகளில் வெப்பஅலை வீசக்கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

Nations கோப்பை ஹாக்கி போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

நியூஸிலாந்தில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் இந்தியா 2-1 என்ற கோல்கணக்கில் ஜப்பானை வென்று அரையிறுதிக்கு முன்னேறியது.

நாளை மறுநாள் நடைபெறும் கடைசி லீக் ஆட்டத்தில இந்தியா - உருகுவே அணியை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் ஈரான் - நியூஸிலாந்து அணிகளுக்கு இடையேயான ஆட்டம் 2-2 என்ற கோல்கணக்கில் டிரா ஆனது.

நள்ளிரவு மணி 12.30-க்கு நடைபெறும் ஆட்டத்தில் பிரான்ஸ் - Senegal-ஐ எதிர்கொள்கிறது.

நாளை அதிகாலை மணி 3.30-க்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் ஈராக் - நார்வேயுடன் மோதுகிறது.

>>>>>><<<<<<

இலங்கையில் நடைபெறும், முத்தரப்பு கிரிக்கெட் போட்டியில் பங்கேற்கும் இந்தியா-ஏ அணியில் வேகப்பந்த வீச்சாளர் அஷோக் சர்மா சேர்க்கப்பட்டுள்ளார்.

காயம் காரணமாக யுத்வீர் சிங் அணியிலிருந்து நீக்கப்பட்டதை அடுத்து, இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

நாளை தம்புலாவில் நடைபெறும் போட்டியில் இந்தியா-ஏ அணி – ஆப்கானிஸ்தான்-ஏ அணியை எதிர்கொள்கிறது.

>>>>>>end<<<<<<